**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு ஜீன் மாதம் 3ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

பொருள் எண்.1

**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.20452/2020/LA3 நாள்.10.11.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020–2021ன் கீழ்** குடிநீர் விநியோகத்திற்கு பெரியாற்று படுகையில் திறந்தவெளி கிணறு அமைக்கும் பணியினை ரூ.30,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.315 நாள்.30.12.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும், **மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26/2021/ஆ1 நாள்.18.02.2021ன்படி** தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் மேற்காணும் பணிக்கு 02.06.2021 அன்று மிண்ணனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. **ஆன்லைனில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை.**

| ஒப்பந்தக்காரர் பெயர் | **ஒப்பந்த** சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. M.மாடசாமி,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.07%<br>குறைவு | ரூ.30000/– AXIS Bank KDNR D.D.No.001716 நாள். 27.05.2021 ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. C.வேலுத்துரை,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 1.73%<br>அதிகம் | ரூ.30000/– IOB Bank KDNR D.D.No.135409 நாள். 27.05.2021 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.07%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.M.மாடசாமி, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4551/2020/இ1)**

**தீர்மான எண். 498**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.20452/2020/LA3 நாள்.10.11.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020–2021ன் கீழ்** கடையநல்லூர் நகராட்சி – வாரச்சந்தை வளாகத்தில் குடிநீர் விநியோகத்திற்கு தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி **( Ground Level Sump)** அமைக்கும் பணியினை ரூ.40,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.315 நாள்.30.12.2020 ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும், **மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை** ந.க.எண்.26/2021/அ1 நாள்.18.02.2021ன்படி **தொழில்நுட்ப அனுமதி**

**வழங்கியுள்ளதன் அடிப்படையிலும்** மேற்காணும் பணிக்கு 02.06.2021 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. **ஆன்லைனில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை.**

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. C.வேலுத்துரை,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.05%<br>குறைவு | ரூ.40000/– IOB Bank KDNR D.D.No.135404 நாள். 27.05.2021 ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. M.மாடசாமி,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 1.63%<br>அதிகம் | ரூ.40000/– AXIS Bank KDNR D.D.No.001715 நாள். 27.05.2021 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.05%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. C.வேலுத்துரை ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4551/2020/இ1)**

**தீர்மான எண். 499**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

இந்நகராட்சி பேருந்து நிலையத்தின் வடக்கு பக்கம் கடை எண்.1 ஐ திரு.L.அலிபாதுஷா S/o,லியாகத் அலி, 178C/178A, ரோடு எண்.11 (மெஹ்ராஜ் நகர்) என்பவருக்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.5640/2016/அ3 நாள்.15.11.2017 மற்றும் இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.295 நாள்.18.09.2017ன்படி 01.10.2017 முதல் 30.09.2020 வரை உரிமம் வழங்கப்பட்டு அன்னார் மேற்கண்ட கடையினை நடத்தி வந்தார். இந்நிலையில் தன்னால் கடையினை நடத்த முடியவில்லை. எனவும் மேற்கண்ட கடையினை திரும்ப ஒப்படைப்பு செய்வதாகவும், அன்னாரின் 02.01.2020ம் தேதிய மனுவில் தெரிவித்துள்ளார். அன்னாரின் மனு பரிசீலிக்கப்பட்டது. மேலும் 31.03.2020 வரை நிலுவையின்றி வாடகை செலுத்தியுள்ளார். மேலும் அன்னார் இக்கடைக்காக ரசீது எண்.8292/17/18/ நாள்.20.09.2017ன்படி செலுத்தியுள்ள ஏல டெபாசிட் தொகை ரூ.100000/– மற்றும் ரசீது எண்.12923/17–18/நாள்.13.11.2017ன்படி செலுத்தியுள்ள கூடுதல் வைப்புத்தொகை ரூ.49200/–ல் 2018–19ம் ஆண்டுக்கு வாடகைக்காக ஈடு செய்யப்பட்ட தொகை ரூ.19588/– போக மீதம் ரூ.29612/– ஆகமொத்தம் ரூ.129612/–ஐ திரு.அலிபாதுஷா என்பவருக்கு வழங்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.31 நாள்.12.03.2020ல் அனுமதி வழங்கியுள்ளது. மேலும் இக்கடை தொடர்பாக 2019–20 தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடைகளும் எழுப்பப்படவில்லை. மேலும் இத்தீர்மானத்தின்படி அனுமதி பெறப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாவதால் இதுநாள் வரையிலும் அன்னாருக்கு தொகை திரும்ப வழங்கப்படவில்லை. எனவே திரு.அலிபாதுஷா என்பவருக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.129612/–ஐ திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 16/2020/அ3)**

**தீர்மான எண். 500**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

கடையநல்லூர் நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2020–21ன் கீழ் இந்நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் சீராக வழங்கும் பொருட்டு தேவையான லிட்டர் கொள்ளவு கொண்ட தரைமட்ட நீர்த் தேக்க தொட்டி (Ground Level Sump) புதிதாக கட்ட ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வாரச்சந்தை வளாக வடமேல்புறம் அமைக்க இந்நகர்மன்ற திர்மான எண்.315 நாள்.30.12.2020ல் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திரு.C.வேலுத்துரை ஒப்பந்தக்காரருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.498 நாள்.03.06.2021ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் அன்னாருக்கு 03.06.2021 அன்று வேலை உத்திரவும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி வாரசந்தை வளாகம் வடமேல்புறம் உள்ள கடைகளை (Stall) மாற்றி அமைக்கவும் மற்றும் மேற்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது இந்நகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4551/2020/இ1)**

**தீர்மான எண். 501**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்)S.ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**